நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றம், திண்டுக்கல்.,
முன்னிலை: திரு.S.பாக்கியராஜ், பி.எஸ்சி, பி.எல்
நீதித்துறை நடுவர் எண்.1, திண்டுக்கல்.
2025 ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 09–ம் நாள், செவ்வாய்க்கிழமை,

M.P.No.7/2025

in

**C.C.No. 128/2018**

**வழக்கின் தரப்பினர்களின் பெயர் விவர குறிப்பு**

**சாந்தி, 45/2018**
**க/பெ.துரைராஜ்,(லேட்)**
**க.எண்.47, T.அய்யம்பாளையம்,**
**தாடிகொம்பு வழி,**
**திண்டுக்கல் மாவட்டம். = மனுதாரர்/எதிரி**

**//எதிராக //**

**ஜோசப் வேலுச்சாமி,**
**த/பெ.வீருகேத்தயகவுடர்(லேட்)**
**கோனூர்,**
**கசவணம்பட்டி கிராமம்,**
**திண்டுக்கல்.** = எதிர்மனுதாரர்/புகார்தாரர்

மனுதாரர்/எதிரி சார்பாக வழக்கறிஞர் திரு.B.S.கர்ணன் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர்/புகார்தாரர் சார்பாக வழக்கறிஞர் T.சிவசந்திரன் அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதமும் கேட்டும் ஆவணங்களை பரிசீலணை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்/எதிரி தரப்பில் 3 காசோலைகள் மற்றும் 2 கடன் உறுதி சீட்டுகள் ஆகியவற்றை ராஜேஸ்வரி, மரிய ஜெயராணி மற்றும் மார்டின் தியாகராஜன்

ஆகியோர் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி 94 of BNSS (கு.வி.மு.ச பிரிவு 91) ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் 3 காசோலைகள் மற்றும் 2 புரோ நோட்டுகள் ஆகியவை ராஜேஸ்வரி, த/பெ.ஜோசப், மரிய ஜெயராணி, க/பெ. மார்டின் தியாகராஜன் மற்றும் மார்டின் தியாகராஜன், த/பெ.விசுவாசம் ஆகியோர்கள் வசம் உள்ளது எனவும், மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு முக்கியமானவை எனவும், எனவே, மேற்படி ஆவணங்களை மேற்படி நபர்கள் மூலம் தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் உரையின் சுருக்கம்**

எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் மனுவில் சொல்லப்பட்டுள்ள காசோலைகள் மற்றும் கடன் உறுதி சீட்டுகள் குறித்து எதிர்மனுதாரர்/புகார்தாரருக்கு தெரியாது எனவும், இவ்வழக்கிற்கு தொடர்பு அற்றவவை எனவும், மேலும் மனுதாரர்/எதிரி தரப்பில் Crl.m.p.No.7964/2018 மற்றும் Crl.m.p.No.9085/2023 என கையெழுத்து பரிசோதனைக்காக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், இந்நிலையில் வழக்கினை தாமதபடுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனு தள்ளுப்படி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது.

**3) தீர்மானிக்கப்படவேண்டியவை**

**மனுதாரர் கோரியவாறு இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதுவே ஆகும்.**

மனுதாரர்/எதிரி தரப்பில் புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய தொகையை கொடுத்துவிட்டேன் எனவும், ஆவணங்களை திருப்பி தராமல் வெற்று காசோலைகளை நிரப்பி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வாதத்திற்கு என வகை செய்யப்பட்ட நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/எதிரி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காசோலைகள் மற்றும் கடன் உறுதி சீட்டுகள் இவ்வழக்கிற்கு எவ்வகையில் தொடர்புடையவை என விளக்கப்படவில்லை. மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. எனவே மேற்க்கண்ட காரணங்களின் அடிப்படையில்

இம்மனு மனுதாரர்/எதிரிக்கு எதிராகவும் எதிர்மனுதாரர்/புகார்தாரருக்கு ஆதரவாகவும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**எனவே இந்த மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது,**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு என்னால் இன்று 09.09.2025 அவை அறிய பகரப்பட்ட உத்தரவு.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.09.09 17:53:44 +0530

நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம்

திண்டுக்கல்.

1. மனுதாரர்/எதிரி தரப்பு சாட்சியம் சான்றாவணங்கள் எதுவும் இல்லை.
2. எதிர் மனுதாரர்/புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள் எதுவும் இல்லை.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.09.09 17:53:49 +0530

நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம்

திண்டுக்கல்.